# ஆயரின் ஆசி மடல் 

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,*

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்தப் புதிய மாதத்தை காணச்செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த புதிய மாதத்தின் வாக்குத்தத்த வசனம்

**“உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்”** சங்கீதம் 128:2.

மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும். இது இறைவனின் நியதி. சோம்பேறிகளை ஆண்டவர் விரும்புவதில்லை, பயன்படுத்துவதும் இல்லை.

1. மோசே ஆடுகளை மேய்த்தவன், தேவன் அழைத்தார் பயன்படுத்தினார்
2. எலிசா 12 ஏர்மாடுகளைப் பூட்டி உழுத உழைப்பாளி, அவனை எலியாவுக்கு துணையாக அழைத்தார் பயன்படுத்தினார்.
3. ஆமோஸ் அத்திபழும் பொறுக்கினான், அழைத்தார் பயன்படுத்தினார்.
4. தாவீது ஆடுகளை மேய்த்தான், அரசனாக உயர்த்தினார்.
5. பேதுரு மீன் பிடித்தான், அழைத்தார் பயன்படுத்தினார்.

திருமறையில் ஆண்டவரை நாம் பார்க்கும்பொழுது அவர் பெரிய உழைப்பாளி என்று அறியலாம். தொழிலாளிகளை அழைத்தார், பயன்படுத்தினார். ஆண்டவர் உலகத்தின் முதலாளி, நாம் அனைவரும் அவருக்கு தொழிலாளி என்ற உணர்வு தேவை.

## தொழிலாளர் தினம் / உழைப்பாளர் தினம் வரலாறு

1886ம் ஆண்டு மே மாதம் அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரில் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் 40,000 தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள், காரணம் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தான் வேலை செய்வோம் என போராடி பல உழைப்பாளிகள் மரித்தனர். இந்தியாவில் சென்னையில் 1923ல் முதல் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது, சிவப்பு கொடி ஏற்றினார்கள்.



கடவுளின் படைப்பில் மனிதனுக்கு உழைப்பும், ஓய்வும் கொடுக்கப்பட்டுள்ளது. உழைப்பு கடவுள் மனிதனுக்கு கொடுத்த கடமை, உழைப்பாளர் தினமாகிய இன்று உழைப்பையும், உழைப்பாளிகளை யும், உழைப்பின் மேன்மையையும் சிந்திப்போம்.

## 1. உழைத்து வாழ்வோம் : (2தெச 3:11)

நாம் உழைத்து வாழ வேண்டும், உழைக்கவில்லையெனில் நாம் வாழ முடியாது. “உங்களில் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாக சுற்றித்திரிந்து பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறோம்” என்று பவுல் கூறுகிறார். Isaac Wats என்ற அறிஞர் கூறுகிறார். “கைகள் சூறையாடுவதற்கோ, திருடுவதற்கோ அல்ல, நேர்மையாக உழைப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ளது” Thamos Dekkav அவர்கள் “நேர்மையான உழைப்பாளர்கள் வனப்புள்ள முகத்தோடு இருப்பார்கள், உழைப்பு கடவுள் கொடுத்த கட்டளை. (ஆதி 2:15). தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கமும் வைத்தார். கொடுத்த கட்டளையை மீறி கவனத்தை உழைப்பின் மீது வைக்காமல் பிசாசுடன் உறவாடி பாவம் செய்தான். உழைப்பு கடினப்படுத்தப்பட்டது. (ஆதி 3:19) உழைப்பு நமது உரிமை என நிலைநாட்டப்படுகிறது. நமது ஆண்டவர் உண்மையாக உழைக்கும் மக்களோடு இருந்து அவர்களை வழிநடத்துகிறார்.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்” – பாரதியார் தன் கவிதைகளில் சொல்கிறார். உழைத்து வாழ்கிறவர்களை மரியாதை செய்யப்பட வேண்டும், மற்றவர்கள் இகழப்பட வேண்டும். பாரதியார் விருப்பம் இன்று நடைமுறையில் இல்லை, பிறனிடத்திலிருந்து பணத்தை சுரண்டி வாழாமல் உழைத்து வாழ்வோம். உழைக்காமல் வாழ்கிறவர்களின் உடல் நலம் கெட்டு இருக்கிறது, உற்சாகமாய் உழைக்கிறவர்களுக்கு உடல் ஆரோக்கியம் அதிகரிக்கிறது. (சங் 128:2) “உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்” என்று கர்த்தர் உரைத்து உழைத்து வாழ அழைக்கிறார்.

## 2. உழைப்பை மதித்து வாழ்வோம் : (கொலோ 4:1)

உழைப்பை மதிப்போம். உழைப்பாளிகளுக்கு மரியாதை செய்வோம். செய்கிற வேலையை வைத்து மதிக்கும் உலகம் எப்படி

வேலை செய்கிறார் என்பதை பார்த்து மதிப்பளிக்க வேண்டும். எஜமான்/தலைவர்கள் வேலைக்காரருக்கு நீதியும், நன்மையும் செய்ய வேண்டும். (1தீமோ 5:18) "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாக இருக்கிறான்". (மத் 25ல்) இயேசு சொன்ன தாலந்து உவமை நன்றாக வேலை செய்து சம்பாதித்த ஐந்து, இரண்டு தாலந்து வாங்கியவர்கள் பாராட்டப்படுகின்றனர். ஒரு தாலந்து வாங்கியவனும் வேலை செய்தவனுமான அவனை பொல்லாதவன், சோம்பேறி, பிரயோஜனமற்றவன் என்று கூறுகிறது. மத் 25:26,30 படி இந்த நாளில் உழைப்பை மதித்து வாழ்வோம்.

### 3. உழைப்பை உண்மையாக செய்வோம் : (எபே 6:7,8)

உண்மையாய் உழைக்க வேண்டும், பார்வைக்காக அல்ல முழு மனதோடு வேலை செய்ய வேண்டும். கர்த்தருக்கென்றே நல் மனதோடே வேலை செய்யுங்கள், பல துறைகளில் வேலை எல்லாம் உழைப்பை மையமாக கொண்டது. உழைப்பில் அழுப்புண்டு, சோர்வுண்டு, ஆனால் உண்மையாக உழைத்தால் கடவுளுக்கும், நமக்கும், மற்றவர்களுக்கும் உறவு ஏற்படும். (கொலோ 3:24) "எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்". (பிரசங்கி 9:10) "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் முழு பெலத்தோடே செய்" உண்மையாக செய்வது என்பது மனப்பூர்வமாய் முழு பெலத்தோடும் செய்ய வேண்டும். யோசேப்பு தான் பணி செய்த இடத்தில் உண்மையுள்ளவனாய் இருந்தான், உயர்த்தப்பட்டான். மோசே தன் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான். எனவே உண்மையாய் உழைத்தால் உயர்வு உண்டு.

### முடிவுரை :

''காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது'' உழைப்பாளர் தினத்தில் நாம் உழைத்து வாழ்வோம், உழைப்பை மதித்து வாழ்வோம், உண்மையாக வாழ்வோம் என உறுதி எடுப்போம்.

*கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாரக.*

*இறை பணியில்,*

**Rev. R.A.J. செல்வின்துரை**



# ஊழியத்தின் பாதையிலே...

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் ஊழியத்தின் பாதையில் ஆண்டவர் நம்மை சிறப்பாக வழிநடத்தினார் ஆண்டவரை ஸ்தோத்திரிக்கிறேன். கடந்த மார்ச் மாதம் 19ஆம் தேதி நம்முடைய ஆலயத்தில் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் மூலமாக "அகில உலக ஜெபநாள்" சிறப்பாக ஆசரிக்கப்பட்டது. அந்த கூடுகையில் தைவான் நாட்டிற்காக ஜெபக்குறிப்புகள் மூலம் சிறப்பான ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது, பெண்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

ஏப்ரல் மாதம் 2ம் தேதி நம்முடைய ஆலயத்திலே குருத்தோலை ஞாயிறு பவனி சிறப்பாக ஆசரிக்கப்பட்டது. இந்த குருத்தோலை பவனியில் நம்முடைய திருச்சபை மக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். குறிப்பாக ஆலய பாடகர் குழுவினர், ஓய்வுநாள் பாடசாலை வகுப்பு பிள்ளைகள், வாலிப சகோதர, சகோதரிகள், திருச்சபையின் பெண்கள், ஆண்கள் என அனைவரும் இதில் கலந்து கொண்டது மிக ஆச்சரியத்திற்குரியது. இதில் கலந்துகொண்ட அனைவருக்கும் நமது திருச்சபையின் பிள்ளைகள் மோர் மற்றும் தண்ணீர் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். அது மட்டுமல்லாது இந்த பவனி நம்முடைய யூ ட்யூப் சேனலிலும் பதிவேற்றப்பட்டு அனைவராலும் பாராட்டப்பட்டது, தொடர்ந்து ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. பின்னர் அந்த பரிசுத்த வாரத்தினுடைய கன்வென்ஷன் கூட்டங்கள், கட்டளை வியாழன் ஆராதனை என அனைத்தும் நடைபெற்றது. புனித வெள்ளியன்று இயேசு சிலுவையில் கூறிய ஏழு வசனங்களை தியானித்து சிறப்பாக ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து 9.4.2023 அன்று கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாகிய ஈஸ்டர் பண்டிகை அதிகாலை 3 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் திருச்சபையின் அனைத்து குடும்பத்தாரும் வந்து தேவ ஆலயத்திலே தேவனை பணிந்து கொண்டார்கள்.

ஈஸ்டர் தினத்தன்று இரவு 7 மணிக்கு நமது ஆலயத்தில் "ஜெகத்ரட்சகர்" இன்னிசை குழுவினரின் இன்னிசை பாடல்கள் மற்றும் பப்பட்ஷோ சிறப்பாக நடைபெற்றது, ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். 14.04.2023 வெள்ளிக்கிழமை அன்று நம்முடைய திருச்சபையிலே "சேகர பெண்கள் ஐக்கிய சங்கப் பண்டிகை" சிறப்பாக நடைபெற்றது. அந்த பண்டிகையில்

நம்முடைய திருச்சபையில் உள்ள பெண்களும், கிளை திருச்சபையாகிய இரட்சண்யபுரம் திருச்சபையிலிருந்தும் பெண்கள் கலந்து கொண்டார்கள். காலையில் திருவிருந்து ஆராதனையுடன் ஆரம்பிக்கப்பட்டு, பெண்கள் பவனியாக சுற்றி வந்தார்கள். தொடர்ந்து பெண்கள் ஐக்கிய சங்க பண்டிகை நடைபெற்றது. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை அனைத்து பெண்களும் கலந்து கொண்டு தேவன் நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். நம்முடைய திருச்சபை சார்ந்த பெண்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சி “பெண்கள் மாநாடு போல இருந்தது” என்று கூறினார்கள்.

23.04.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தாளமுத்துநகர் சுற்றியுள்ள மாதாநகர் பகுதியில் சுவிசேஷ ஊழியமாக சென்றோம். இதில் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். ஆண்டவருடைய சுவிசேஷம் துண்டு பிரதி மூலமாகவும், தனி நபர் ஊழியமாகவும் மேற்கொள்ளப்பட்டது. சுவிசேஷ ஊழியத்திற்கு செல்லும்பொழுது மக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல, அநேகர் எங்களுடைய இல்லத்திற்கு வந்து ஜெபியுங்கள் என்று சொல்லி அழைத்து, ஜெபக்குறிப்புகளை கொடுத்து எங்களை ஜெபிக்க சொன்னார்கள். மேலும் இப்படிப்பட்ட கனமான ஊழியத்தைச் செய்வதற்கு ஆண்டவர் நம் தூய பேட்ரிக் இணைப்பேராலய திருச்சபையை ஏவினதினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

29.4.2023 சனிக்கிழமை அன்று நம்முடைய ஆலயத்திலே அசனத்திற்கு என்று சிறப்பு உபவாச கூடுகை நடைபெற்றது. அதிலும் நம்முடைய திருச்சபை மக்கள் 100க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி, துதித்துப் பாடி, ஜெபித்தார்கள். இதைப்போன்ற ஊழியத்தினால் நம்முடைய தூய பேட்ரிக் இணைப் பேராலயம் வேகமாக ஊழியப் பாதையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் நம்முடைய திருச்சபைக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஆவிக்குரிய வளர்ச்சியில் நம்முடைய திருச்சபை மென்மேலும் வளர ஜெபிப்போம், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*இறை பணியில்*

**Rev. M. காலேப் மேன்சிங்**
உதவி குரு

**Rev. R.A.J. செல்வின் துரை**
சேகரத்தலைவர்



## பிறந்தநாள் ஆசரிப்பவர்கள்

**மே 1**

திரு. A. கல்யாண சுந்தரம்
செல்வன். A. ஜோசப் ஜெபின்
திரு. R.P. பாலாஜி
திருமதி. S. கலாவதி
திருமதி. R. பிரின்ஸஸ்
செல்வன். J. ஜோசுவா
திருமதி. J. ஞானசெல்வம்
திருமதி. J. மேபல் தனலட்சுமி
திரு. J. பாக்கியராஜ்
திருமதி. J. மேபல் ராஜகுமாரி
செல்வன். C. தினேஷ்
திரு. P. சந்தனராஜ்
திருமதி. P. ஜீவா கனகமணி
செல்வி. A. ஜெர்ஷா பிரின்ஸி
திருமதி. D. அனுஷியா ராஜன்
திருமதி. ஏஞ்சலின் டேவிட்
திரு. N. சகாயராஜ்
திரு. D. எபன் நேசராஜ்
திருமதி. A. ஞானசுந்தரி
திரு. C. கிப்ட்ஸன்

**மே 2**

திரு. S.V. ஜெயசீலன்
Dr. ரவிசந்திரன்
திருமதி. J. ஜெபா பியூலா ஜெனிபர்
திருமதி. A. வினோலின் ஜெஸினா
திரு. G. ரெனிஸ் குமார்
திரு. T. மோசஸ் பால் யாங்கிசோ
திரு. S. சேர்மராஜ்
பேபி. S. சாகியா கேரிஸ்
செல்வி. நோபி செலஸ்டினா
செல்வி. E. சோனியா
திருமதி. K. கமலா

**மே 3**

செல்வி. J. ஜெயமேரி கிறிஸ்டினா
செல்வன். S.J. ஜூலியன் சாம்ராஜ்
செல்வன். V. ஜெஸ்வின் இஸ்ரவேல்
செல்வன். D. மரியசங்கர்
திருமதி. J. மதுமதி
செல்வன். J. ஏனோக் கிப்ட்சன்
திருமதி. V. லீனா ஜேன் வசந்தி
திருமதி. T. மேபல் சோபியா

**மே 4**

திருமதி. J. திவ்யா
திரு. G. இம்மானுவேல்
திருமதி. D. சுவாதிகா
திருமதி. S. டெய்ஸி அன்னாள்
திரு. P.S. ஜெயகரன்
திருமதி. S. சரோஜினி
செல்வன். S. ஆகாஷ்
செல்வி. ஸ்டெபினா ரோஸ்லின்
திரு. G. ஜான் பாண்டித்துரை
திரு. G. தினேஷ்குமார்
திரு. S. ஜேன் ஜெயகர் அய்யாதுரை
செல்வி. J.M. அன்சிலின் ஜோனா

**மே 5**

திரு. G. சுவாமிதாசன்
செல்வி. W. ஜெஸிக்கா கேத்தரின்
செல்வி. மேரி அனுஷியா
திரு. ஜாண் மனாசே
திருமதி. செல்வி
திரு. S. ஜஸ்டின்
செல்வி. J. அனிகா ஷேரோன்
திருமதி. M. அன்பு பால்கனி
திரு. S. ஜோசப் செல்வகுமார்
திரு. N. ஜெபராஜ்
திரு. B. பன்னீர் செல்வம்

செல்வி. J. ஸ்வீட்லின்
பேபி. S. ஜோவன்னா ஜாய் பெனில்லா
திருமதி. அனிட்டா பால்சன்
திரு. L. ஜான்சன்
செல்வி. J. ஜெரினா
திரு. C. இங்கர்சால் டேவிட் ரவீந்திரன்
திரு. J. அந்தோணி செல்வம்
திரு. J. லெனின் ஜேக்கப்
திருமதி. J. ரோஸ்லின்

**மே 6**

திரு. F. நெகேமியா ஜெயசந்திரன்
திரு. M.A. ராஜன்
திரு. ஜெபமணி
திரு. D. பாலகிருஷ்ணகுமார்
திருமதி. A. சுகந்தா
திருமதி. M. தேவநேசம்
திருமதி. D. எபநேசர் ஹில்டா
திரு. K. ஜெயகுமார்
திருமதி. S. செல்வி
திருமதி. A. ஜெயராணி

**மே 7**

திரு. C. ஜெபகுமார்
செல்வி. D. ஜெயவர்ஷிகா
திருமதி. B. செல்லம் கிரேஸ்
திரு. D. அருள்சிங்
செல்வன். M. பிரதீப் ஜாண்சன்
திருமதி. K. ஜெயராணி
திருமதி. R. சோபியா
திரு. K. ஆபிரகாம்
திரு. எபநேசர்

**மே 8**

செல்வன். C. ஈவன் ஜெபோர்டு
செல்வி. S. ரோஸ்லின்
திருமதி. கிப்டி கலையரசன்
திரு. J. ஜெபாதேவ பிரகாஷ்
திருமதி. S. எஸ்தர்ராணி
திரு. ஜார்ஜ் ஆரோக்கியசாமி
திரு. G. செல்வராஜ் மோசஸ்
திரு. G. ஸ்டீபன்
திருமதி. P. சரண்யா
திரு. P. டேவிட் ராஜன்
திருமதி. R. பொன்ராணி

**மே 9**

திருமதி. எஸ்தர்
திருமதி. பெல்சி கிரேஸ்
செல்வன். R. மேத்யூ துரை
திரு. S. சுதந்திரராஜ்
திரு. S. செல்வ கணபதி
திரு. E. ஸ்டீபன் ஜோசப்
செல்வி. T. சாரோன் நிஷா
திருமதி. S. கிரேஸ்
செல்வி. டயானா
திரு. கோயில்மணி
திருமதி. P. ஹெப்சிபா
செல்வன். W. ஜெப்சன்
செல்வன். D. சாம் டேவிட்
செல்வன். S. ஹரிஷ்

**மே 10**

திரு. J. சேவியர்ராஜ்
திருமதி. J. இந்துமதி
செல்வன். செர்வின் ஜோன்ஸ்
திரு. P. அப்பாத்துரை
திருமதி. S. எஸ்தர் செல்வராஜ்
திருமதி. R. ஹேமலதா தங்கம்
திரு. D. காட்வின் ஆண்ட்ரூஸ்
திரு. பிராங் சந்தோஷ்
திரு. A. ஜெபா எட்வின்
திரு. S. ஜேக்கப் ஆனந்த்
செல்வி. M. சுபாஷினி
திருமதி. N. அன்பு அன்னமரியாள்
திரு. G.T. ஞானமணி
திருமதி. M. அனிஷ்டா



**மே 11**

திருமதி. மேரி
திருமதி. R. நர்மதா
திரு. R. மாரிச்சாமி
திரு. D. கிளாட்சன்
திரு. G. இஸ்ரவேல்
திரு. G. கோயில்ராஜ்
திருமதி. S. காஞ்சனா
திருமதி. V. ஜெஃப்ரின் வருண்

**மே 12**

திரு. M. ராஜ்
திருமதி. கனகமணி
செல்வன். C. மைட்ராஜ்
திருமதி. R. மேபல்
செல்வன். C. எட்வர்ட் மேவின்குமார்
செல்வி. P. ரெஜினா பிளஸ்ஸி
திருமதி. ஜெயா
திருமதி. G. ஞானதிரவியம்
செல்வி. S. ரேச்சல் மார்க்ரெட்
செல்வி. K. ஏஞ்சலின் ஷர்லி
செல்வன். P. ஜேசன் ஸ்டெயின்ஸ்
செல்வி. P. ஜார்ஜினா மெர்ஸி

**மே 13**

திரு. G. ஜோசுவா ரூபன்
செல்வி. A. ஜெனிட்டா
திருமதி. கனக ஜெபராணி
திருமதி. H. ஜோஸ்னா வினோலின்
திருமதி. J. அனிட்டா
திருமதி. J. கிறிஸ்டி
திருமதி. S. ஜோதி சாலமோன்
திருமதி. E. ஹேமா சோபியா
திருமதி. S. ரூத் பிரியா
திருமதி. G. மேரி மலர்விழி
திருமதி. J. அமலா
செல்வன். P. யோசுவா ஞானராஜ்
செல்வன். A. அன்னசாமி பாரதி

**மே 14**

திரு. D. ஜெபசிங்
திருமதி. G.V. பெக்கி மேக்டலின்
திருமதி. K. ராஜம்மாள்
திருமதி. G. பெக்கி மேக்டலின்
திருமதி. P. ராஜமலர்
செல்வன். J. ஜேசன்
திரு. Y. ஞானராஜ்
திருமதி. M. ஜோதிராணி
திரு. J. டேனியல் கிறிஸ்டோபர்
திருமதி. M. மோனிஷா ஜெனிஃபர்
செல்வன். E. அபிஷேக்
செல்வன். R. ரயன் சாமுவேல்
செல்வன் S. இளங்குமரன்
திருமதி. B. ஆக்னஸ் அலெக்ஸிஸ்

**மே 15**

செல்வன். V. நத்தானியா ரூயல்
செல்வி. A. அலீஸ் ஜெஸ்ஸி
திருமதி. இந்திரா
திருமதி. K. ஜேஸ்மின்
செல்வி. S. சலோமி ஜெபர்னா
திரு. C. மாசில்லாமணி
திரு. A. சாமுவேல் பால் தங்கையா
செல்வன். J. ஜேரெக்ஸ்
செல்வன். E.P. ஜோகன் லிவிங்ஸ்டன்
திரு. T. ஜெபஞானம்
செல்வி. ஜெஃப்ரின்
திருமதி. தேவகிருபை
செல்வி. P. ஷீபா மதிவதனி
திரு. K. அந்தோணி லாசர்
திருமதி. J. எபநேசர் ஞானமேரி

**மே 16**

திருமதி. G. வசந்தா
செல்வன். R. ஜெப்சன்ராஜ்
திரு. P. ஆசீர்வாதம்

திரு. J. வசந்த்
திருமதி. J. ஸ்டெல்லா
செல்வி. J. சுஜாதா
திருமதி. லலிதா பண்டாரம்
திரு. S. ஜெயக்குமார்

**மே 17**

திரு. S. வேதமுத்து
திரு. D. ஜேம்ஸ் ஜெயசேகர்
திருமதி. D. அனிபர் மெசியா
செல்வி. D. ரேச்சல் ஞானஷேரன்
திருமதி. D.J. குளோரி
திருமதி. E. ப்ரீத்தி
திருமதி. S. ரோஸ்லின்
செல்வி. ஜாண்சிராணி
செல்வி. J. பெல்சியா
திருமதி. A. சுப்புலெட்சுமி மேரி

**மே 18**

திருமதி. கவிதா
செல்வன். ஹமில் ஜோயல்
திருமதி. M. ராஜி
செல்வன். J. ஹேம்டன்ராஜ்
திருமதி. விஜயராணி ஞானமுத்து
திரு. G. ஜெயபிரகாஷ்
திருமதி. R. புஷ்பலூர்து
திரு. J. சாலமோன் சதீஷ்
செல்வி. E. கேத்ரின்
செல்வன். ஜேடன்
திரு. M. சசிகுமார்
திருமதி. G. அனிட்டா சுபாஷினி
திரு. T. எபநேசர்

**மே 19**

பேபி. எஸ்றா பிரவின்
செல்வி. S. சுப்புலட்சுமி
திருமதி. பரிபூரண செல்வி
செல்வன். G. பால் மிஷல்
திரு. G. சுரேஷ் தங்கராஜ் தாம்சன்
திரு. கிதியோன் கிங்ஸ்டன்
திரு. P. பொன் சேகர்
திருமதி. J. ஜெயா மல்லிகா

**மே 20**

திரு. D. சாமுவேல் அப்பாவு
திருமதி. D. சந்திரமணி
திருமதி. எபநேசர் ராஜேந்திரன்
திரு. J.S. மேஷாக்
திரு. Y. எட்வின் பிரைட்தாஸ்
திரு. D. சாம்சன் எட்வர்ட்
செல்வி. T. ஜேஃனி மேரி கிறிஸ்டினா
செல்வன். J. போஷன்
திருமதி. ஞானசெல்வம்
திரு. V. சிற்றரசு
திருமதி. பொற்செல்விராய்
திரு. செல்வபாண்டி
செல்வி. M. குளோரி

**மே 21**

திரு. P. டேனியல் பிரவின்குமார்
திரு. A. ஆபிரகாம் ரமேஷ்
திரு. S. சசிக்குமார்
திருமதி. A. வசந்தி
செல்வன். E. சாம் டேனியல்
திரு. J. ஜினு ராஜா
திரு. E. பிச்சைமணி
திரு. J. ஜாஃப்ரி
செல்வன். J. ஆல்வின்
செல்வன். M. மேஷாக்
செல்வன். V. நித்தின் ராபர்ட்
திருமதி. P. அன்னத்தாய் ஹேரிஸ்
திருமதி. H. ஜெஸிந்தா டேனி தாரா
திரு. V. யெப்தா
செல்வி. R. ஜெனிஷ் ஹெப்சிபா ரோஸ்
திருமதி. சகுந்தலா ராஜன்
திருமதி. சாமு
திருமதி. பாத்திமா பானு
செல்வன். A. ஜோஷ்வா ரோஜர்



**மே 22**

திருமதி. S. சரோஜினி
செல்வி. அபிஷா
செல்வி. கிளாரன் எல்சா
திருமதி. D. மரியதங்கம்
திருமதி. S. சுமதி
திரு. S.D.K. தேவராஜன்
திரு. V. சிவசங்கர்
செல்வன். J. ஜில்லியன்
திரு. S. ஞானசுந்தரம்
திருமதி. D. மரிய தங்கம்
திரு. A. தங்கராஜ்
செல்வி. S. ஷைனி பிரியங்கா

**மே 23**

திரு. M. சாம்சன்
திரு. J. ஜோஷ்வா அலெக்ஸாண்டர்
செல்வி. S. திவ்யா யாழினி
திரு. P. ராஜேந்திரன்
செல்வன். ஜெப்ரின் மெல்பிரின்
செல்வன். V. ஜெப்பின்
செல்வன். J. ஜோன்ஸ் கிரஹாம்பெல்
திருமதி. C. பால்ரதி
திரு. P. ஜேசுராஜ்
திரு. N. ஜெயராஜ் ஆசீர்வாதம்
திருமதி. D. ஏஞ்சல் மெர்லின் ஜெபராணி
திருமதி. J. தங்கஜெயா

**மே 24**

செல்வி. T. டிக்ஸிட் ஸ்வீட்டி சாராள்
செல்வன். ஜாண் வில்பிரட்
திருமதி. ரஞ்சிதா தீபன்
செல்வன். மனோவா அதிஷேக்
திருமதி. சர்மிளா பாக்கியம்
திருமதி. D. பெமினா ஸ்வீட்லின் டேனி
திருமதி. பாத்திமா செல்வராஜ்
திரு. N. அருள்ராஜ்
திருமதி. M. மாயா
திருமதி. K. ஹெப்சிபா பிரேம்சியா

**மே 25**

திருமதி. J. ரத்னாவதி
திரு. A. ஜெபராஜ்
திருமதி. P. ஹனிட்டா
திரு. J. சாம் விக்டர் தேவ்நாத்
திருமதி. B. கன்னா ரூபி
செல்வன். R. பாலசிங்
திரு. P. அன்னராஜ்
திருமதி. A. ஷகிலா ரூபி
திரு. E.C. ராஜகுமார் ஆபிரகாம்
திருமதி. B. சுகந்தி
செல்வன். P. டெரின் ஜேக்கப்
திருமதி. கனகமணி

**மே 26**

செல்வி. J. பெலின்
செல்வன். M. டைட்டஸ் கிருபாகரன்
திரு. I. ராஜ பாண்டியன்
செல்வன். L. நிகிஸ் தனபால்
செல்வி. P. ஜவி வினோனா பால்
திருமதி. R. ஹெப்சிபா சோபியா
செல்வன். A. ஜீவர்ட் பால்
செல்வி. J. அனிஸ்
திருமதி. S. எலிசபெத் இந்திராணி
செல்வி. N.R. செலின்
திரு. S. ஜெய்ஸ்டன்
செல்வி. S. சபிரின் ஜெஃபினா
செல்வி. A.J.N. நிஷிலா பிரின்ஸஸ்

**மே 27**

திருமதி. S. மேரி சுபா ரத்னா
திருமதி. W. அன்னம்மாள்
திருமதி. ஜோன்
செல்வன். E. எல்ராய் ஜேசன்
திருமதி. கிறிஸ்டி சாம்
திருமதி. T. பபிதா
திரு. K. டேவிட் ராஜ்
திரு. S. டேனியல் ராஜ்

திருமதி. G. மீனா ஜோதி
செல்வன். P. ஜோயல் சாலமோன்

**மே 28**

திருமதி. S. நிர்மல்ராஜ்
திருமதி. S. இவாஞ்சலின் தயா
திரு. A. அமல்ராஜ்
பேபி. J. ஜெரோனிடா
திரு. S. பிரேம் ஆனந் சைமன் டேனியல்
செல்வன். S. ஜோன்ஸ்
திருமதி. J. கீர்த்தனா
செல்வன். M. ஜெய்டன் ஷான்
செல்வி. A. ஸ்டெல்லா
திருமதி. G. ஜிகிதா
திரு. K. மாதவன்
செல்வன். K. சதீஷ்குமார்
திருமதி. ஞான ஜெபமணி
திரு. R. வில்சன் தர்மராஜ்
திருமதி. K.P. இளமதி
திருமதி. A. சூசையம்மாள்
திருமதி. N. போஷியா ஜெபகுமாரி
செல்வி. M. அபிஷா
திரு. E. ரஞ்சித் பால் வினோத்குமார்
திருமதி. D. பிளஸ்ஸி

**மே 29**

திருமதி. B. கிரேஸ்
திருமதி. T. சந்திரமதி முத்தம்மாள்
திருமதி. S. தங்கமாரி
திருமதி. M. பிளஸ்ஸி
செல்வி. R. பிளஸ்ஸி
திருமதி. J. ஷைனி
செல்வன். D. ஜெய ரோஹித் மனுவேல்
திரு. P.S. ராஜன்
திருமதி. சுகந்த ராணி
திருமதி. K. ஜெயவனிதா
செல்வன். T. கலையரசன்
திருமதி. N. சாந்தா நிக்கோலஸ் மேரி
திருமதி. T. ஹேமலதா ஜெனிட்டா
திருமதி. E. விஜோ நேச ஷாரோன்
திரு. R. டேவிட் வசந்தகுமார்
திரு. R. ஃபிரட்ரிக்

**மே 30**

திரு. A. அண்ணாமலை ராஜன்
திருமதி. ஞானமேரி
திருமதி. பியர்லின் மெர்சி
திருமதி. செல்லக்கனி
செல்வி. J. லவ்லின் கிரேஸ்லின் மேரி
செல்வி. S. அர்ச்சனா
திரு. J. அருண்குமார்
திருமதி. T. சண்முகவடிவு
திருமதி. மனோ ரஞ்சிதம்
திரு. J. அமல்ராஜ்
திரு. D. தினகரன் ஜெயசிங்
திரு. C. செல்வகுமார்
செல்வன். A. ஸ்வீட்லின் ஜெபசிங்
திருமதி. D. லீலி ஹட்சன்
செல்வன். P. பிராங்கிளின்
திரு. T. மெல்வின்
திரு. A. சுகந்தராஜ்

**மே 31**

செல்வன். ராஜா
திருமதி. I. ஷைனி வனஜா
திரு. R. ஜாண் நெல்சன்
திரு. S. சுந்தர் தேவராஜ்
செல்வன். X. எடிசன் ஜேக்கப்
செல்வன். S. சுதாகர் ராஜா
திருமதி. A. ஜெனோ டெல்சி
செல்வன். செல்வா
திருமதி. ஷெரில் ஷம்மா

*கர்த்தர் உங்களை நீடித்த நாட்களாக திருப்தியாக்குவாராக.*
*உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்*



## திருமண நாளை ஆசரிப்பவர்கள்

மே 1 Mr. J. பிரவீன்குமார் & Mrs. P. இமாகுலேட் ராஜசெல்வி
Mr. சாம் செல்வமணி & Mrs. S. ஜூலியட் ரேச்சல்
Mr. C. பிரபாகரன் & Mrs. P. ஜான்ஸிராணி
Mr. C. ஜாண் ஆபிரகாம் & Mrs. J. மெர்ஸி பாலா
Mr. E. ஏசுவடியான் & Mrs. A. எஸ்தர் மேரி பாக்கியம்

மே 2 Mr. டேனியல் & Mrs. D. ஹெலன்
Mr. ராஜசேகர் & Mrs. E. மிஸ்பா ஜார்ஜினா

மே 3 Mr. M. ராஜமாணிக்கம் & Mrs. ஜெபகனி
Mr. எட்வின் மங்களபாண்டி & Mrs. பாலின்
Mr. V. பிரின்ஸ் ராஜேந்திரன் & Mrs. S. தங்க விஜயா
Dr. ரவிச்சந்திரன் & Mrs. R. கணேஷ்வரி
Mr. P. தாமஸ் ஞானராஜ் & Mrs. T. நன்சி ராஜன்
Mr. J. சுரேந்குமார் & Mrs. S. திவ்யா
Mr. R. பர்னபாஸ் நியூமென் & Mrs. B. சாரதா
Mr. R. பிரபாகரன்பால் & Mrs. ஜேனட் பிரபாகர்

மே 4 Mr. பிரேம் ஆனந் சைமன் டேனியல் & Mrs. P. கிரேஸ்
Mr. கிறிஸ்பானோஸ் பெயித்ராஜ் & Mrs. E. ஜீலியா கிரேனாப் ராஜம்மாள்
Dr. ஜேம்ஸ் சுந்தர்சிங் & Dr. M.S. ஜேஸ்லின் தேவகிருபை

மே 5 Mr. J. செல்வம் பொன்ராஜ் & Mrs. S. பிரேமலதா
Mr. A. ஞானசேகர் & Mrs. நோபுள்ராணி
Mr. J. ஜென்சன் & Mrs. D. ஜுலி பெமிலாராணி
Mr. G. ஜேசன் & Mrs. J. ஜேக்குலின்
Mr. M. ஆல்ட்ரின் பிரகான்ஸ் & Mrs. A. அனிட்டா ஸ்மைலி
Mr. V. யெப்தா & Mrs. E. சுஜி பியூலா

மே 6 Mr. தனசேகர் & Mrs. ஜெபஜெஸி
Mr. N. எபனேசர் ஜாண் பாண்டியன் & Mrs. I. கிரேஸ் தெபோராள்
Mr. A. ஜோசப் மாணிக்கம் & Mrs. J. கெத்சியாள் ஜெபசீலி
Mr. K.T. வெஸ்லி & Mrs. W. வயலட் ஜெயா
Mr. M. புருசோத்தமன் & Mrs. P. சுமதி
Mr. I. அந்தோணிராஜ் & Mrs. K. ரேணுகா
Mr. T. அருணன் & Mrs. K. அமலா பால் ஜோதி

மே 7 Mr. J. சாலமோன் ராஜ்குமார் & Mrs. S. சாந்தி ராணி ஏஞ்சல்
Mr. R. ஸ்டாலின் & Mrs. S. ஜாஸ்பர் செலினா
Mr. D. பென்யமின் & Mrs. ஜேஸ்மின் பவானி
Mr. கோயில்மணி & Mrs. கனகமணி
Mr. D. ரவிலாரன்ஸ் ஜெபமணி & Mrs. R. ஜெபராணி

மே 8 Mr. P. செல்வமணி & Mrs. S. செல்வராணி
Mr. R. சாமுவேல் சஞ்சய்ராஜா& Mrs. பிரபானி
Mr. அலெக்சாண்டர் ஜெசுபாதம் & Mrs. வினிட்டா
மே 9 Mr. P. செல்லத்துரை & Mrs. S. சாந்தி
Mr. T. வில்சன் & Mrs. W. ஜெனோ
Mr. R. வில்சன் தர்மராஜ் & Mrs. M. இந்துமதி
Rev. J. ஜாண் சாமுவேல் & Mrs. J. பின்ஸியா
Mr. S. ஜாண் ரசல் & Mrs. A. ஷகிலா ரூபி
மே 10 Mr. W. கோயில்மணி & Mrs. ரெஜினா
Mr. D. மனோகரன் & Mrs. செல்வமணி
Mr. R. வில்லியம்ராஜ் & Mrs. W. அன்னம்மாள்
Mr. K. ஜோசப் மூர்த்தி & Mrs. J.K. அனிட்டா
Mr. P. செல்வின் & Mrs. S. மெர்சி
Mr. D.N. சுப்புராஜ் @ ராஜா & Mrs. S.R. எஸ்தர் மேரி
Mr. D. வேதபாலன் ராஜா & Mrs. V. அனுசியா ஜேனஸ்
Mr. V. ஆனந்த் தங்கபாலன் & Mrs. P. சரண்யா
Mr. M. கால்டுவெல் & Mrs. C. கிரேஸ்
Mr. P. காமராஜ் பிரேம்குமார் & Mrs. G.E. ஜாய்லெட்
மே 11 Mr. J. பால்ராஜ் ஆபிரகாம் & Mrs. மேரி
Mr. ஜேக்கப் விக்டர் & Mrs. புஷ்பம்
Mr. A. ஜெயராஜ் & Mrs. P. பெல்ஷியா
Mr. J. அந்தோணி செல்வம் & Mrs. A. ஜெயக்கெடி
Mr. P. ஜெபசிங் & Mrs. P. டெய்ஸிராணி
Mr. S. எபநேசர் & Mrs. K.P. இளமதி
Mr. J. ராபர்ட் கிங்ஸ்லி & Mrs. J. ஜோஸ்பின் மெட்டில்டா
Mr. R. ஆண்ட்ரு ஜெபகுமார் & Mrs. A. சுஜாதா
Mr. J. அமல்ராஜ் & Mrs. S. இவாஞ்சலின் தயா
Mr. P. வின்பிரட் ஜோசுவா & Mrs. M. மெர்லின்
மே 12 Mr. A. சுந்தர்சிங் & Mrs. S. மெஜூலா
Mr. R. ராய் மனோகர் & Mrs. ஸ்டெல்லா
Mr. D. ஜெயக்குமார் & Mrs. இந்திரா
Mr. J. ஜோசப் நோபுள் குணசீலன் & Mrs. S. மேரி ஸ்டெல்லா ஏஞ்சலின்
Mr. காட்வின் விஜயகுமார் & Mrs. ஜான்சி ராணி
Mr. B. கிருபாகரன் ஜோசப் & Mrs. ஷீலா
Mr. J. ஜெயகுமார் & Mrs. J. ஞானபாக்கியம்
Mr. K. வினோலின் & Mrs. V. அனிட்டா
Mr. S. மதி செல்வம் & Mrs. M. வினோதா
Mr. K. ஜேசுபாலன் தாமஸ் & Mrs. J. மரிய சித்ரா
Mr. J. அருண்குமார் & Mrs. A. வினோலின் ஜெஸினா



Mr. I. ஜானி பேட்ரிக் & Mrs. J. ஜூலி பேட்ரிக்
மே 13 Mr. S. சாமுவேல் மாணிக்கராஜ் & Mrs. A. சுமிதா
Mr. J. கிங்ஸ்லி & Mrs. D. விஜி மார்கிரெட்
Mr. P. ஞான அன்டோ கேத்ரின் & Mrs. G. ஜெனிபர்
Mr. G. செல்வகுமார் & Mrs. S. பெல்ஷியா
Mr. J. ஜினுராஜா & Mrs. J. ஜெனிட் அன்ஸ்லின்
மே 14 Mr. S. அலெக்ஸ் ரெய்வந்த் & Mrs. A. ஷெர்லி கிரேனா
Mr. S.K.N. சாமுவேல் & Mrs. S. சுகந்தி
Mr. K. ஜெயகுமார் & Mrs. லில்லி
Mr. G. பீட்டர் எடிசன் & Mrs. N. போஷியா ஜெபகுமாரி
Mr. G. ஜசன் பாபு & Mrs. J. பிரின்சஸ் மெர்லின்
Mr. D.J. ஜாண் சாலமோன் மனோகர் & Mrs. J. கலைஜோதி
மே 15 Mr. எடிசன் சாமுவேல் & Mrs. திலகராணி
Mr. ஆனந்தராஜ் & Mrs. A. இந்திரா
Mr. P. ஜெபராஜ் & Mrs. J. தமிழ்செல்வி
Mr. P. ஜோயல் மோசஸ் & Mrs. J. அனி
Mr. J. டிக்கின்சன் & Mrs. ஏஞ்சலின் டிக்கின்சன்
Mr. T. யோகராஜன் தாமஸ் & Mrs. Y. மெர்ஸி
மே 16 Mr. S. குமாரமணி & Mrs. K. ஆனந்தி
Mr. S. ஜேன் ஜெயகுமார் அய்யாதுரை & Mrs. J. மதுமதி
Mr. J. சாமுவேல் & Mrs. J. செருபா
Mr. A. கேபா தனராஜ் ரவி & Mrs. K. மேரி கிரேஸ்
Mr. B. உதயகுமார் & Mrs. J. பெர்சியா அன்பு
மே 17 Mr. C. சாம்சுந்தர் & Mrs. E. சந்திரா
Mr. S. ஜெயக்குமார் & Mrs. விமலா
Mr. A. தீமோத்தேயு & Mrs. J. ஜோஸ்பெல்
Mr. D. எட்வின் ஜாண்சன் & Mrs. E. பாக்கிய மாலதி
Mr. N. ஜெயராஜ் ஆசீர்வாதம் & Mrs. G. அலெக்ஸ் சந்திரா
Mr. A. முத்துசெல்வம் & Mrs. M. பொன்பாக்கியம்
Mr. A. ஆபிரகாம் ரமேஷ் & Mrs. A.R. ரெபேக்காள் தேவ இரக்கம்
Mr. J.P.S. கிருபாகரன் & Mrs. K. ஜேஸ்மின்
Mr. K.S. ஜெயபால் & Mrs. J. செலினா
Mr. T. ஜாண்சன் & Mrs. J. லீலாவதி
Mr. G. ரெனிஸ்குமார் & Mrs. R. ஸ்ரீமதி அனுஷியா
Mr. L. கென்னடி ஞானராஜ் & Mrs. K. கார்த்திகை தேவி
மே 18 Mr. B. கனிராஜ் & Mrs. பாக்கியசெல்வம்
Mr. P. ஜாண்சன் ராஜா பிரபாகரன் & Mrs. ஜெயா
Mr. J. சாமுவேல் ராஜன் & Mrs. S. சுகிர்தா
Mr. G. ஜெயக்குமார் & Mrs. J. ஜெபா ஆனந்தி

Mr. P. டேனியல் பிரவின் குமார் & Mrs. D. ஸ்டெபி
மே 19 Mr. J. ரஜீத் ஞானசிகாமணி & Mrs. பெல்ஷி கிரேஸ்
Mr. J. தாமஸ் பொன்னையா & Mrs. T. ஜெஸிந்தா
Mr. J.K. பெவின் ஜோசப் & Mrs. சபிதா பெவின்
Mr. M.A. பிரின்ஸ் & Mrs. A. செல்வஅமுதா
Mr. A. பெரியசாமி & Mrs. P. பேபி ரேணுகா
Mr. G. கோயில்ராஜ் & Mrs. K. ஏஞ்சலின்
Mr. A. சந்தோஷ் & Mrs. K. லில்லி பாலின்
Mr. S. டேவிட் பாபுதேவ் & Mrs. S. ஆஷா
Mr. S. பவுல் ராஜ் & Mrs. P. கிருபா ஜான்ஸிராணி
Mr. G. விஜயகுமார் & Mrs. W. ஜேஸ்மின்
Mr. G. மைக்கேல்ராஜ் & Mrs. M. விஜயகுமாரி
Mr. P. சாம் & Mrs. A. அகஸ்டா அருள்மேரி
மே 20 Mr. J. ஜோசப் சுவாமியடியான் & Mrs. J. குளோரி
Mr. D. அருள் தர்மராஜ் & Mrs. A. எஸ்தர்
Mr. D. ஜெயசிங் & Mrs. ஜூலியட்
Mr. P. மோகன் & Mrs. K. அபிநயா
Mr. P.S. ஜெயகரன் & Mrs. J. பெல்சியா சுகந்தி
மே 21 Mr. R. டேவிட் & Mrs. D.S. ஹெலன் சகிலா
Mr. V. சிவசங்கர் & Mrs. S. மெடோனா
Mr. S. ஸ்டீபன் சாமுவேல் & Mrs. ஹெப்சிபா
Mr. I. ஜெபராஜ் & Mrs. J. ரோஸ்லின்
மே 22 Mr. I. ராஜ பாண்டியன் & Mrs. R. எபநேசர்
Mr. S. மகேந்திரன் & Mrs. P. பேபி ஸ்டெல்லா
Mr. D. ஹேரிஸ் தேவதாஸ் & Mrs. P. அன்னத்தாய்
Mr. K. ஞானதுரை & Mrs. G. குணசெல்வி
Mr. D. ஞானதாஸ் & Mrs. P.T. செல்வி கோகிலா
Mr. J. தியோடர் ஞானரத்தினம் பால்ராஜ் & Mrs. கலா தியோடர்
Mr. J. கிருபாகரன் & Mrs. K. எஸ்தர் விஜயா
Mr. R.G. மூர்த்தி & Mrs. G. மெர்ஸி நிர்மலா
Mr. ஆரோக்கியதாஸ் & Mrs. A. செல்லம்மாள்
Mr. P.G.S. ஜெபகுமார் & Mrs. S.B. ஜோசப்பின்
Mr. J. அகஸ்டின் & Mrs. S. மார்செலின்
Mr. M. ஆர்தர் பொன்ராஜா & Mrs. M.D. பாக்யவதி
Mr. V. சரவணகுமார் & Mrs. S. மோனிஷாராய்
Mr. G. சுரேஷ் தங்கராஜ் தாம்சன் & Mrs. மார்க்ரெட் ரஞ்சிதம்
Mr. L. பால்சன் டேவிட் & Mrs. அனிட்டா பால்சன்
மே 23 Mr. J. இருதயராஜ் & Mrs. I. ஆதிலட்சுமி (எ) எஸ்தர்
Mr. J. டேனியல் கிறிஸ்டோபர் & Mrs. D. ஜாய் அலீஸ்



Mr. S. தேவராஜ் & Mrs. D. ஜெபமாதுமேரி
Mr. G. ரமேஷ் குமார் பால் & Mrs. டயானா
Mr. S. ஜெய்ஸ்டன் & Mrs. P. பவித்ரா
Mr. J. ஜெயகுமார் & Mrs. மனோரஞ்சிதம்
Mr. A. சாம் அருள் பிரசாத் & Mrs. சரிதா
மே 24 Mr. S. பவுல் & Mrs. பிரேமா
Mr. G. கனகராஜ் & Mrs. இந்திரா
Mr. S. ஜெயகுமார் & Mrs. J. அனி சோபியா
Mr. D.S. டேனியல் தனராஜ் & Mrs. பென்சியா
Mr. J. வசந்த் & Mrs. V. ரூபினா வசந்த்
Mr. K. சிதம்பரம் சாமுவேல் & Mrs. கிருபைகனி
Mr. A. ரவி & Mrs. R. ஜெபசெல்வி ரூபினா
Mr. P. ஜான்சன் & Mrs. ஹெப்சிபாய்
மே 25 Mr. ஜோன்ஸ் & Mrs. சுகன்யா
Mr. S.D.R. விஜயசீலன் & Mrs. V. ரீனா
Mr. P.S. பிரபாகரன் & Mrs. P. ஜெலின்
Mr. P. மோசஸ் செல்வராஜ் & Mrs. மனோரா ஜாய்
Mr. A. அண்ணாமலை ராஜன் & Mrs. M. ஜோசப்பின் பாக்கியரதி
Mr. M. சாலமோன் செல்வராஜ் & Mrs. S. ஜோதி
Mr. P. ஜோசப் பென்ஜமின் & Mrs. J. ஜுடித்
மே 26 Mr. P. அப்பாதுரை & Mrs. A. கங்காதேவி அப்பாதுரை
Mr. J. தேவரெஜின் & Mrs. A. ஜெஸி வினோதினி
Mr. S. அல்பட் ஜாக்சன் நிதின் & Mrs. N. சுகந்தி
Mr. J. விஜேஷ்குமார் ஜெயபால் & Mrs. ஜெயஸ்ரீ விஜேஷ்
Mr. D. வின்சன்ட் சூரியராஜ் சுந்தர்சிங் & Mrs. R. பிரசன்னகுமாரி
Mr. J. ஆனந்த் இம்மானுவேல் & Mrs. எஸ்தர்
Mr. S. சுந்தர்ராஜ் & Mrs. M. ராமலெட்சுமி (எ) இவாஞ்சலின்
Mr. D. தேவபிச்சை & Mrs. D. ஜெயராணி
Mr. T. ஞானசுந்தரம் & Mrs. E. எஸ்தர் மேரி
Mr. தாராசிங் & Mrs. ராணி
Mr. B.D.S. ஜெபதாஸ் & Mrs. J. பியூலா
மே 27 Mr. S. ஜெபசிங் & Mrs. S. ஹெற்றிசியா ஜெபசிங்
Mr. B. சாமுவேல் கணேஷ் கார்த்திக் & Mrs. G. மீனா ஜோதி
Mr. M. சண்முகராஜேஷ் & Mrs. I. ஜெனோலின் ஜெபா பிரின்ஸி
Mr. V. ஜெபராஜ் & Mrs. J. சகுந்தலா
Mr. D. ஜெபர்சன் & Mrs. கோல்டா ஜெபர்சன்
Mr. E. பிரவீன் சார்லஸ் & Mrs. கிப்டா பிரவின்
Mr. K. சக்திவேல் & Mrs. S. அனந்தமாள்
Mr. ராஜு சாலமோன் & Mrs. ஹெப்சிபா பிலோமின்

Mr. J. ஜெயசந்திரன் & Mrs. ஹெப்சிபா ஜெயசந்திரன்
Mr. T. பொன் செல்வராஜ் & Mrs. P. அனிதா
Mr. S. இளங்கோ பாக்கியராஜ் & Mrs. E. வனிதா
Mr. G. செல்வராஜ் மோசஸ் & Mrs. S. ராணி
மே 28 Mr. A. ராஜா & Mrs. R. சுதா ஜாய்ஸி
Mr. C. நவீன்டேனி ஐசக் & Mrs. G. மோனிகா
Mr. R. பால்சுதாகரன் & Mrs. P. கிரேஸ் பிரியதர்ஷினி
Mr. பிரின்ஸ் சோயாஸ் & Dr. சிந்தியா பிரின்ஸ்
Mr. W. கிறிஸ்டோபர் & Mrs. K. சுதா
Mr. F. நெகேமியா ஜெயசந்திரன் & Mrs. N. ரூபி ஸ்டெல்லா
Mr. K. ஜெபசகேயு & Mrs. J. நளினா நவரோஜ்
Mr. M. துரைசெல்வன் & Mrs. D. கமலா
Mr. A. ஜெயசீலன் & Mrs. டல்சி
மே 29 Mr. E. மெடின் பிரிங்கிள் & Mrs. K. ஷாமிலி ரத்ன கிரிஷா
Mr. M. அல்பர்ட் ராஜேந்திரன் & Mrs. A. ஜெயஞானசுந்தரி
Mr. E. ஜெபா ஜஸ்டின் சார்லஸ் & Mrs. A. இவாஞ்சலின்
Mr. D. செல்வராஜ் & Mrs. பாத்திமா செல்வராஜ்
Mr. ரீஸ் & Mrs. S. பிரசன்னா
Mr. பால் டேவிட் & Mrs. ஷெரில் ஷம்மா
Mr. S. ஜேம்ஸ் ஜெயசைமன் & Mrs. K. சோபியா
Mr. S.P. ராஜா & Mrs. P. ஜெயசீலி ராஜா
Mr. P. மகாராஜன் & Mrs. D. செல்வராணி
Mr. J. கிறிஸ்டோபர் ஜாண் சாமுவேல் & Mrs. T. ஜெஸ்லின் சாம்
Mr. S. அற்புத ரவிகுமார் & Mrs. H. வயலட் ஜெமிமா
மே 30 Mr. S. ஷெல்டன் ராஜதுரை & Mrs. S. ஷேனா
Mr. J. ஜெயபிரகாசம் தனராஜ் சந்தோஷம் & Mrs. J. ஹெப்சிபா ஷைனி
Mr. S.D.K. ராஜன் & Mrs. சகுந்தலா ராஜன்
Mr. பூரண சந்திரன் & Mrs. சுபாஷினி
மே 31 Mr. A. தேவராஜ் & Mrs. உஷா
Mr. E. ஆபிரகாம் மனுவேல் & Mrs. A. ஜெபராணி பிரீடா
Mr. A. ஞானராஜ் & Mrs. G. ஜெயா
Mr. E. டேவிட் ராஜகுமார் & Mrs. D. விஜிலா
Mr. S. பிரெடிரிக் நேசகுமார் & Mrs. D. ஹில்டா பொற்செல்வி

பிறந்த நாள், திருமண நாள் ஆசரிப்போரை கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அன்றைய தேதிகளில் காலை 5.30 மணி ஆராதனைகளில் உங்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.
அனைவரும் கலந்து கொண்டு ஆண்டவரின் நிறைவான ஆசீர்வாதத்தை பெறுவீர்களாக.



*மறக்க முடியாத மாமனிதர்கள்*

# பரி. அகஸ்டின்

*(St. Augustine)*

வாலிபப் பருவத்தில் தீய வாழ்க்கை நடத்தி அத்துடன் வேதப் புரட்சிக் கட்சியில் சேர்ந்து பின்பு தன் தவறை உணர்ந்து, அதற்காக உத்தம மனஸ்தாபப்படடு கிறிஸ்துவின் திருவடியை அண்டி திருச்சபைக்கு ஒரு தீபம் போல விளங்கியவர் பரி. அகஸ்டின். இவர் கி.பி. 354இல் நவம்பர் மாதம் மூன்றாம் நாள் ஆப்ரிக்கா கண்டத்திலுள்ள நுமிடியா நாட்டில் தாகஸ்தே என்ற சிற்றூரில் பிறந்தார். இவருடைய தகப்பனார் பெரும் செல்வர் அல்லர் என்றாலும் போதிய செல்வம் உடையவர். அவர் மூர்க்க குணமுள்ளவர். விக்கிரகாராதனை செய்தவர். ஆனால் அவருடைய மனைவி பரி. மானிக்கா தூய வாழ்க்கை நடத்தியவர். அவருடைய முயற்சியால் அகஸ்டினின் தந்தையார் நமதாண்டவரண்டை வழி நடத்தப்பட்டு ஞானஸ்நானம் பெற்றதாக வரலாறு கூறுகிறது. நம் பக்தரின் உடன் பிறந்த சகோதரர் நாவிகியஸ் என்பவரைப் பற்றியும் கன்னிமடத் தலைவியாக இருந்த சகோதரியைப் பற்றியும் நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

## பரி. அகஸ்டினின் இளமைப் பருவம்

பரி. அகஸ்டினின் அறிவு நுட்பத்தையும் சிறந்த நினைவாற்றலையும் கண்ட இவரது தந்தை இவர் கல்வியில் முன்னேற்றமடைய எல்லாவித உதவியும் செய்தார். இவர் முதலில் தாம் பிறந்த ஊரிலுள்ள பள்ளியில் சேர்ந்து பின்னர், இலக்கணத்திலும் செய்யுளிலும் உரைநடையிலும் தேர்ச்சிபெற, தோர் என்னும் நகருக்குச் சென்றார். இவருக்கு பதினாறு வயதிருக்கும்போது இவரை காத்தேஜிலுள்ள கல்லூரியில் சேர்க்க இவர் தந்தையார் விரும்பி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கையில் ஒரு வருடம் இவர் இல்லத்திலேயே வேலையின்றி வீண்பொழுது போக்க நேரிட்டது. அவ்வாறிருக்கும்பொழுது இவர் தம் தாயின் சொற்கேளாமல் தீய வழிகளில் சென்று தீயவர்களின் தொடர்பாலும் தீய எண்ணங்களை வளர்க்கும் நூல்களைப் படித்தும் நெறி தவறி நடந்தார்.

இவர் தம் இருபதாம் வயதில் தம் தாயாரை மகிழ்விக்க எண்ணங்கொண்டு கார்தேஜியை விட்டுத் தம் தாய் இருந்த தாகஸ்தே என்ற ஊருக்கு வந்து அங்கு இலக்கியமும் சொற்பொழிவும் கற்றுக்

கொடுக்க ஒரு பள்ளியை நிறுவி அதை நடத்தி வந்தார். வேத போதனைகளை விட்டு 'மணிக்கிய கொள்கைகளைப்' பின்பற்றிய இவரை நல்வழிப்படுத்த இவர் தாயார் கடவுளிடம் உபவாசத்தோடும் கண்ணீரோடும் ஜெபம் செய்து வந்தார். இவரிடம் ஒருவித மாறுதலும் காணாமல் போகவே அந்த அம்மையார் அத்தியட்சரை அணுகித் தம் மகனுடன் உரையாடி அவரைத் திருத்துமாறு மன்றாடினார். அதற்கு அவர் அறிவினால் செருக்கடைந்திருக்கும் அகஸ்டினுக்குத் தம் சொற்கள் பயனளிக்காதென்றும் கடவுளிடம் அவருக்காக ஜெபிப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை என்றும் சொன்னார். பரி. மானிக்கா விடாப்பிடியாய் தம் மகனை எவ்வகையிலாவது நேர்வழியில் கொண்டுவர வேண்டுமென்று மன்றாடினார். அதற்கு அவர் "கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக. இவ்வாறு கண்ணீர் விட்டுச் செய்யும் உன் தவமும், ஜெபமும் வீண் போகாது" என்று சொன்னார்.

புனித அகஸ்டின் ரோமாபுரிக்குச் சென்ற பின் இவர் நோய்வாய்ப்பட்டு மரணத்தருவாயிலிருந்தார். பின்னர் நோய் நீங்கி குணமடைந்த பின் தமக்கு நோய் நீங்கியதற்கு தம் தாயின் ஜெபமே காரணம் என்று தாம் சந்திக்கும் அனைவரிடமும் சொன்னார். அங்கிருந்து மிலான் நகருக்குச் சென்றார்.

## பரி. அகஸ்டினின் மனமாற்றம் :-

ஒருநாள் தனிமையாகப் போய் ஒரு அத்திமரத்தினடியில் விழுந்து அழுதார். "ஆண்டவரே எப்பொழுதும் என்மேல் கோபமாயிருப்பீரோ, நான் செய்த குற்றங்களை மறக்க மாட்டீரோ" என்று அழுது புலம்பினார். பின்னர் தான் தம் பாவங்களால் பின்னும் இழுப்புண்டு, தன்னை முழுவதும் ஒப்புக் கொடுக்க தாம் தயங்குவதாக எண்ணித் தம்மையே நொந்து "எவ்வளவு காலம் இவ்வாறு இருப்பேன் ஆண்டவரே, நாளை வரையிலா? ஏன் இன்றே கூடாது? என் இழி நிலையை இந்த நேரத்திலேயே ஏன் முடிவு செய்யக்கூடாது" என்று வருந்தி வருந்தி நொந்தார்.

அப்பொழுது அண்டையிலுள்ள வீட்டில் ஒரு சிறு பிள்ளையின் குரல் லத்தீன் மொழியில் இசையாக "எடுத்து வாசி, எடுத்து வாசி" என்று கேட்டது. பரி. பவுல் அப்போஸ்தலனின் நிருபத்தைத் திறந்து பார்க்க பரி. அகஸ்டின் கீழ்க்கண்ட வரிகளைக் கண்ணுற்றார். "ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம். வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே



நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுங்கள்'' அதற்கு மேலும் வாசிக்க இவருக்கு தோன்றவில்லை; வாசிக்க அவசியமில்லை என்று எண்ணினார். மனதில் அமைதியும் உடலில் புது வலிமையும் உள்ளத்தில் நம்பிக்கையும் உண்டாகக் கண்டு அகமகிழ்ந்தார். தம் தாயாரைக் கண்டு தாம் குணமடைந்த நற்செய்தியை தெரிவித்தார். பின் நம் பக்தன் தம் உள்ளம் உருகி "பதவிக்காவும் உலக செல்வத்துக்காவும், சிற்றின்பங்களுக்காக வும் இனிமேல் எனக்கு மனக்கவலை ஏது? என் உதடுகள் உம்மைக் குறித்தும் உம் மேன்மையைக் குறித்தும் என் மீட்பைக் குறித்துமே பேசும்" என்று பாடினார்.

தமது இருபத்திரண்டாவது வயதில் கி.பி. 386இல் பரி. அகஸ்டின் மறுபிறப்படைந்து நமதாண்டவருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார்.

## பரி. அகஸ்டினின் புரட்சிகரமான செயல்பாடுகள் :-

நம் பக்தரின் தூய்மையான வாழ்க்கையும் வேத சாத்திர அறிவும் சொற்பொழிவாற்றும் திறமையும் மக்கள் மனதைக் கவர்ந்தன. அக்காலத்தில் கிறிஸ்தவ மக்கள் மரித்தவர்களின் கல்லறைத் தோட்டங்களில் விழாக்கள் நடத்தி குடித்து வந்தார்கள். இதை அறவே நிறுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்களிடம் நேராகப் பேசி சொற்பொழிவு செய்தார். அதைக் குழுமியிருந்த மக்கள் கேட்டு கண்ணீர் வடித்து தங்கள் தவறுதல்களை உணர்ந்து அந்நாள் முதல் அத்தீய பழக்கத்தை விட்டு விட்டதாக வரலாறு கூறுகிறது.

நம் பக்தனின் எல்லைக்குள் மற்றொரு துர்ப்பழக்கமும் இருந்தது. சிசெரியா என்னப்பட்ட இடத்தில் தகப்பன், மக்கள், சகோதரர் உறவினர் – இரண்டுக் கட்சியினராகப் பிரிவுபட்டு, வருடத்தில் ஒரு சமயம் பல நாட்கள் தொடர்ச்சியாக ஒருவர் மீது ஒருவர் கல்லெறிந்து கலகம் செய்வது வழக்கம். இக்கலகத்தைப் பார்க்க அநேக மக்கள் வந்து சந்தோஷமடைவார்கள். இதன் விளைவாக கிறிஸ்தவ மக்களின் குணம் கீழாகப்போய், சபையின் நிலைமை சீர்கெட்டு வந்தது. பரி. அகஸ்டின் நமதாண்டவரிடம் அம்மக்களுக்காக மன்றாடி, அக்கூட்டத்தாருடன் கண்ணீருடன் பேசி வருஷந்தோறும் நடக்கும் அக்கலகத்தை தவிர்க்க வேண்டுமென்று வேண்டினார். இதற்காக அவர் சொல்வன்மையையும் அவருடைய சுயநலமற்றத் தன்மையையும் புகழ்ந்து பேசினார்களே

யொழிய, அவர்கள் தங்கள் பழக்கத்தை விடுவதாக இல்லை. ஆனால், இறுதியில் நம் பக்தன் வெற்றியடைந்தார். அப்பழக்கம் அவர்களை விட்டகன்று அங்கு சமாதானம் நிலவக்கண்டார்.

### பரி. அகஸ்டின் மூலம் மக்கள் சபையில் சேர்க்கப்படுதல் :-

யூத மார்க்கத்தாருக்காகவும் கிறிஸ்துவை அறியாத மற்ற மக்களுக்காகவும் நம் பக்தன் ஊக்கமாய் ஜெபிப்பதோடு, அவர்களோடு பழகி, ஒரே தேவனை வழிபடுவதும் அவர் இவ்வுலகத்திற்கு அனுப்பிய நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதும் அவசியம் என்பதைக் குறித்து அவர்களுக்குச் சொற்பொழிவுகள் மூலம் விளக்கினார். அவர் பிரசங்கத்தினால் அநேக புறமதஸ்தர்கள் சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

### பரி. அகஸ்டினின் இறுதி வாழ்க்கை :-

கி.பி. 428இல் பானிபஸ் பிரபுவின் அழைப்புக்கிணங்கி ஜென்சிராக் என்பவரின் தலைமையில் வன்டல்ஸ் என்பவர்களின் பெரிய சேனைகள் ஸ்பானியா நாட்டிலிருந்து ஆப்பரிக்காவுக்கு வந்தது. அச்சேனையிலுள்ளவர்கள் நகரங்களை சுட்டெரித்து, மக்களைக் கொடூரமாய் நடத்தினார்கள். சபைகளை நிர்வகித்த அந்த அத்தியட்சர்களும் குருமாரும் அச்சேனை வருமுன் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டுமா என்ற பிரச்சனை ஏற்பட்டது. பரி. அகஸ்டின், சபையின் தலைவர்கள் நாட்டை விட்டு ஓடிவிடக் கூடாதென்று உறுதியாகக் கட்டளையிட்டார். பரி. அகஸ்டின் இருந்த பட்டணமாகிய ஹிப்போ முற்றுகையிடப்பட்டது. சுமார் 14 மாதகாலமாக முற்றுகையிலிருக்கும் போது, பரி. அகஸ்டின் நோய்வாய்ப்பட்டார். வெளியில் யுத்த ஆரவாரம் நடக்கும்போது நம் பக்தன் அமைதியாக ஜெபம் செய்து தன்னை யாரும் தியானத்திலிருந்து கலைக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். தனக்கு உணவு கொண்டுவரப்படும் நேரம் மட்டுமே தன்னைப்பார்க்க விரும்பிய நண்பர்களைத் தன்னிடம் வர அனுமதித்தார். வியாதி அதிகரித்தபொழுது தன் கண்களுக்கு எதிரே தாவீதின் மனஸ்தாப சங்கீதங்களைப் பெரிய எழுத்துக்களில் எழுதி தொங்கவிடும்படிச் செய்து அவற்றைக் கண்ணீரோடு வாசித்து தியானம் செய்தார். உடல்நலம் அதிகமாகக் கெட்டு, அவர் மரணத்தருவாயிலிருக்கும்போதும் அவருடைய மனநிலையும் மலர்ந்த முகமும் பாதிக்கப்படவில்லை. இவர் தன் எழுபத்தாறாம் வயதில் ஆண்டவரோடு இளைப்பாறுகிற பரம பக்தரோடு சேர்ந்து கொண்டார்.





## பாடல் பிறந்த வரலாறு

### பண்டிதர் ஜார்ஜ் டஃபீல்டு

**(Dr. George Duffield)**

**பாடல் : "நல் மீட்பர் பட்சம் நில்லும்"**

**"Stand up, Stand up, for Jesus''**

நீக்ரோ மக்களை அடிமைகளாக விற்று, வெள்ளையர்கள் பணம் சம்பாதித்த காலம் அது. இந்த அடிமைகளின் பரிதாப நிலைமை கனம் டைங் (Rev. Tyng) என்ற ஒரு வாலிப குருவின் மனதை அசைத்தது. சுமார் நூறு வருடங்களுக்கு முன் இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிலடெல்பியா பகுதியில் எபிபனி ஆலயம் (Church of Ephiphany) என்ற ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில் குருவாகப் பணியாற்றிவந்தார். அடிமை வியாபாரத்தை இவர் அறவே வெறுத்து, அது பெரிய பாவமென்று தம் சபையாருக்குப் பிரசங்கங்களில் இவர் சுட்டிக்காட்டி வந்தார். அவருடைய சபையோரில் அநேகர் அடிமை வியாபாரம் செய்து வந்தவராவார்கள். எனவே, இந்த வாலிப குருவின்மீது அவர்கள் குரோதங்கொண்டு, அவரைப் பகைத்தார்கள். அங்குத் தம் பணியை ஆற்ற இயலாதவராய், அவர் அந்த ஆலயத்தை விட்டு விலக வேண்டியதாயிற்று.

குரு டைங்குடைய நண்பரில் சிலர், அவர் தம்முடைய பணியைத் தொடர்ந்து நடத்துவதில் ஊக்கம் காட்டி, பிலடெல்பியா பட்டணத்தில் ஒரு கட்டடத்தில் ஒரு பெரிய அறையை வாடகைக்கு எடுத்து, அதில் அவர் கிறிஸ்தவ வழிபாடு நடத்தி, பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். குரு டைங்குடைய ஊழியம் வெற்றிகரமாக நடந்து வந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று சுமார் ஐயாயிரம் மக்கள் அவர் பிரசங்கத்தைக் கேட்க கூடி வந்திருந்தார்கள். "புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்" (யாத் 10:11) என்ற வசனத்தின் பேரில் மிக ஊக்கத்துடனும், உணர்ச்சியோடும் பிரசங்கம்

செய்தார். ஆராதனை முடிவில் சுமார் ஆயிரம் மக்கள் மனமாறுதலடைந்து, தங்கள் வாழ்க்கையைக் கடவுளிடம் ஒப்படைத்து, அவருடைய தொண்டர்களாக உழைக்க வாக்களித்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின், அவ்வாரத்தில் புதன்கிழமையன்று குரு டைங் ஒரு விவசாயப் பண்ணைக்குச் சென்றார். அங்கு ஒரு இயந்திரத்தை இயக்கிக்கொண்டிருந்த குதிரையைப் பிரியத்துடன் தட்டிக் கொடுத்தார். அப்பொழுது அவருடைய சட்டை இயந்திரத்தில் சிக்கி, இழுக்கப்பட்டு அதனால் அவர் கை துண்டிக்கப்பட்டது. மறு ஞாயிற்றுக்கிழமை அவர் மரணத்தருவாயிலிருந்தார். கடைசியாகத் தம் சபை மக்களுக்கு ஏதாவது செய்தி கொடுக்க அவருக்கு விருப்பமிருக்குமாவென்று அறியும் எண்ணத்துடன் அவருடைய நண்பரொருவர் அவரிடம் சென்று அளவளாவியபொழுது அவருடைய வாயிலிருந்து வந்த கடைசி வார்த்தைகள் "கிறிஸ்துவிற்காக எழுந்து நிற்கச் சொல்லுங்கள்" என்பவையே.

குரு டைங்குடைய நண்பரான டாக்டர் டஃபீல்டு (Dr. Duffield) என்பவர் இவ்வார்த்தைகளைக் கேட்டபொழுது, உணர்ச்சி வசப்பட்டு "நல் மீட்பர் பட்சம் நில்லும்" (Stand up, Stand up for Jesus) என்ற பாட்டை எழுதினார். குரு டைங்குடைய சடலம் அடக்க ஆராதனைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கு ஆராதனை முடிந்தவுடன் இப்பாட்டு சபையாருக்கு வாசிக்கப்பட்டது. இது இப்பொழுது கிறிஸ்தவப் பாடல்களில் முக்கிய இடம்பெற்று, உலகமெங்கும் பல மொழிகளில் பாடப்பட்டு வருகின்றது.

## ஏப்ரல் மாதம் இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்கள்

| | |
|---|---|
| 15.04.2023 | திருமதி. J. செந்தூர்கனி |
| 16.04.2023 | திருமதி. T. ராஜகனி |
| 17.04.2023 | திரு. T. இன்பராஜன் |
| 23.04.2023 | திருமதி. L. மாரியம்மாள் |

கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்களின் பிரிவினால் வாடும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு தேவன்தாமே சமாதானத்தையும் ஆறுதலையும் அருளிச் செய்வாராக.



# VBS விடுமுறை வேதாகமப்பள்ளி

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இந்த ஆண்டு VBS வகுப்புகள் 3ம் தேதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. திருச்சபையின் பெற்றோர் உங்கள் பிள்ளைகள் அனைவரையும் உற்சாகமாய் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தலைப்பு : கீழ்ப்படிதல்**

*கிறிஸ்துவின் பணியில்*

திருமதி. C. ஜெஸிலா காலேப்
திரு. சாலமோன் (TNDCM)
பொறுப்பாளர்கள்

Rev. M. காலேப் மேன்சிங்
Rev. R.A.J. செல்வின் துரை
திருப்பணிவிடையாளர்கள்



## ஏப்ரல் மாதம் ஞானஸ்நானம் பெற்றவர்கள்

**குழந்தைகள் ஞானஸ்நானம்**

09.04.2023
1. J. மிட்செல் சாரா
2. L.G. ஆகில் ஜெய்
3. S. ஏஞ்சலின் கிறிஸ்டி
4. ஜோ ரியான்
5. G. ஹசன்

**பருவ கடந்தவர்கள் ஞானஸ்நானம்**

09.04.2023
1. P. ராதிகா
2. சித்திரை செல்வி
3. M. கணேஷ்
4. B. மதனேஷ்வரி
5. B. தமிழரசி

16.04.2023
6. T. விநாயகமூர்த்தி (எ) அருண்

ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் இணைந்திருக்கும் இவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம். நல்ல மேய்ப்பனான தேவன்தாமே இவர்களை ஜீவிய காலமெல்லாம் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூட்டும்படி ஜெபிப்போம்.

மே 2023

# வேதாகமத்திலிருந்து கேள்விகள்



(யோவான்)

1. அவர் கர்த்தர் என்று கூறியது யார்?
2. ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் யார்?
3. ரோமர் நம்மை அழித்துப் போடுவார்கள் என்று கூறியது யார்?
4. ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்கும் என்று கூறியது யார்?
5. அதிகாரம் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் யார்?
6. இயேசு மகிமை அடைந்த பின்பு சீஷர்கள் அறிந்து கொண்டது என்ன?
7. மரணத்தை விட்டு நீங்கி யார் ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறதாக இயேசு கூறினார்?
8. ஏசாயா கர்த்தருடைய மகிமையைக் கண்டபோது சொன்னது என்ன?
9. கதவுகள் பூட்டியிருக்கையில் இயேசு வந்து கூறியது என்ன?
10. நீங்கள் எல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்று இயேசு எப்போது கூறினார்?
11. அதிக கேடானது ஒன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்று இயேசு யாரிடம் கூறினார்?
12. வேதவாக்கியம் யாரை தேவர்கள் என்று சொல்லுகிறது?
13. பிதா தம்மை தொழுது கொள்ளுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்?
14. தேவனுக்கேற்ற கிரியை எது?
15. யாருக்கு நித்திய ஜீவன் உண்டு?

குறிப்புகள் :

1. A4 பேப்பரில் விடைகளை எழுத வேண்டும்.
2. **ஒரு கேள்விக்கு இரு வகையான பதில்கள் இருந்தால் அந்த கேள்விக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.**
3. **வசனத்தை அப்படியே எழுதக்கூடாது, விடைகளை மாத்திரம் எழுத வேண்டும்.**
4. இருப்பிடம் கட்டாயம் எழுத வேண்டும்.
5. 15ம் தேதிக்குள் விடைத்தாள்களை வேதவினா பெட்டியில் போட வேண்டும்



## ஏப்ரல் மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. | லூக்கா 4:41 | – பிசாசுகள் |
| | லூக்கா 9:20 | – பேதுரு |
| 2. | லூக்கா 10:21 | – ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும், மறைத்து; பாலகருக்கு வெளிப்படுத்தினார் |
| 3. | லூக்கா 16:25 | – உலக சுகபோக வாழ்க்கை நரகம் அழைத்துச் செல்லும் |
| | | – உலக துன்ப வாழ்க்கை பரலோகம் அழைத்துச் செல்லும் |
| | | – நீதியான நியாயத்தீர்ப்பு உண்டு |
| 4. | லூக்கா 21:26 | – பூமியின் மேல் வரும் ஆபத்தினால் உண்டாகும் எதிர்பார்ப்பினால் |
| 5. | லூக்கா 4:27–30 | – மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு கொண்டு சென்றபோது |
| 6. | லூக்கா 9:62 | – பின்னிட்டுப் பார்க்கிற எவனும் |
| 7. | லூக்கா 5:8,9 | – சீமோன் பேதுரு |
| 8. | லூக்கா 13:35 | – கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று சொல்லுங் காலம் வருமளவும் |
| 9. | லூக்கா 6:26 | – பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளை புகழ்ந்தார்கள். |
| 10. | லூக்கா 11:41 | – பிச்சை கொடுங்கள். |
| 11. | லூக்கா 7:2–5 | – யூதருடைய மூப்பர்கள் |
| 12. | லூக்கா 8:9,10 | – உவமைகளாக |
| 13. | லூக்கா 7:9 | – நூற்றுக்கு அதிபதியைக் குறித்து |
| 14. | லூக்கா 6:35 | – உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். |
| 15. | லூக்கா 11:20 | – இயேசு தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியினால் |

## ஏப்ரல் மாதம் வேதாகம புதிர் சரியான விடை எழுதியவர்கள்

திரு. J. முத்துமாணிக்கம் ஆபிரகாம்
திரு. D. காட்வின் ஆண்ட்ரூஸ்
திரு. K. சாலமோன் ராஜா
திருமதி. ஃபிரிடா ஹென்றி
திருமதி. கஸ்தூரி தமிழரசன்
திருமதி. லில்லி ஜெகநாதன்
திருமதி. ஜோதி ஜெயராஜ்
திருமதி. மல்லிகா
திருமதி. காஞ்சனா அசோகர்
திருமதி. விமலா ஜெயகுமார்
திருமதி. செலினா ஜெயபால்
திருமதி. விஜயா ஜெபராஜ்
திருமதி. ராணி இன்பராஜன்
திருமதி. குமாரி தாமஸ்
திருமதி. C. சரோஜினி சந்திரன்
திருமதி. C. கிறிஸ்டி செல்வமணி
திருமதி. D. எலிசபெத் நோவா
திருமதி. E. பியூலா எபநேசர்
திருமதி. I. குளோரி ஜோசப்
திருமதி. J. மாலதி போர்டு
திருமதி. J. ஞான கிருபா விக்டோரியா
திருமதி. K. விக்டோரியா கனகராஜ்
திருமதி. N. அன்பு இன்பராஜ்
திருமதி. N. ஜான்சிராணி தாமஸ்
திருமதி. S. பரிபூரண பாக்கியவதி
திருமதி. T. எஸ்கிளின்

### அறிவிப்பு

**மார்ச் மாத வரவு செலவு கணக்கு**
**ஜூன் மாத பேட்ரிக் மலரில் வெளியாகும்.**

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!



1. இறக்கை முளைத்த குஞ்சு
கூட்டிலே தங்காதாம்
இறக்கை முளைத்துக் கொண்டதால்
வீட்டை விட்டுப் போனாளாம்
தீட்டை தலையில் சுமந்தாளாம் – அவள் யார்?

2. கர்த்தரின் சுதந்திரம்
கையினில் கிடைக்க
கண்ட மட்டும் கதறி அழுதாள்
தந்தால் உயிரோடு
இல்லையேல் மண்ணோடு என சபதமிட்டாள் – அவள் யார்?

3. எனது பெயரின் முதல் எழுத்து உயிர் எழுத்து
மறுபகுதியிலே பயணம் செய்யலாம்
பள்ளத்தாக்கும் என்னில் உண்டு. – நான் யார்?

4. உலக அழகிப் போட்டியாம்
உடலை அளக்கும் காட்சியாம்
அழகைக் காட்ட மருத்தாளாம்
அரியணையை விட்டு வந்தாளாம் – அவள் யார்?

5. B.A, B.L., படிக்கல
Black கோட்டும் போடல
Best ஆக நியாயம் தீர்த்த
First ஆன தீர்க்கதரிசி – இவள் யார்?

6. சமையல் எல்லாம் டாப்பு
உள்ளத்திலே ஒரு சூப்பு
வாயிலே முறுமுறுப்பு
நல்ல பங்குக்கு ஆப்பு – இவள் யார்?

7. மாமனார் மெச்சிய மருமகள் – இவள்
இயேசுவின் வம்ச வரலாற்றில்
இடம் பெற்றவள் – யார் அவள்?

**விடைகள்**

1. தீனாள் (அதி 34:1,2)
2. ராகேல் (ஆதி 30:1)
3. ஆகார், ஆகார் பள்ளத்தாக்கு (ஆதி 16:1, கலா 4:25)
4. வஸ்தி (எஸ்தர் 1:12)
5. தெபொராள் (நியாயாதி 9:4,5)
6. மார்த்தாள் (லூக்கா 10:40,41)
7. தாமார் (ஆதி 38:26, மத்தேயு 1:3)



## மே

| | | | |
|---|---|---|---|
| 1 | சங்கீதம் 121 | 1பேதுரு 3-4 | 1சாமுவேல் 1-2 |
| 2 | சங்கீதம் 122 | 1பேதுரு 5 | 1சாமுவேல் 3-4 |
| 3 | சங்கீதம் 123 | 2பேதுரு 1-2 | 1சாமுவேல் 5-6 |
| 4 | சங்கீதம் 124 | 2பேதுரு 3 | 1சாமுவேல் 7-8 |
| 5 | சங்கீதம் 125 | 1யோவான் 1-2 | 1சாமுவேல் 9-10 |
| 6 | சங்கீதம் 126 | 1யோவான் 3-4 | 1சாமுவேல் 11-12 |
| 7 | சங்கீதம் 127 | 1யோவான் 5 | 1சாமுவேல் 13-15 |
| 8 | சங்கீதம் 128 | 2யோவான் | 1சாமுவேல் 16-18 |
| 9 | சங்கீதம் 129 | 3யோவான் | 1சாமுவேல் 19-21 |
| 10 | சங்கீதம் 130 | யூதா | 1சாமுவேல் 22-24 |
| 11 | சங்கீதம் 131 | வெளி. 1-2 | 1சாமுவேல் 25-26 |
| 12 | சங்கீதம் 132 | வெளி. 3-4 | 1சாமுவேல் 27-28 |
| 13 | சங்கீதம் 133 | வெளி. 5 | 1சாமுவேல் 29-31 |
| 14 | சங்கீதம் 134 | வெளி. 6 | 2சாமுவேல் 1-2 |
| 15 | சங்கீதம் 135 | வெளி. 7-8 | 2சாமுவேல் 3-4 |
| 16 | சங்கீதம் 136 | வெளி. 10 | 2சாமுவேல் 5-6 |
| 17 | சங்கீதம் 137 | வெளி. 11 | 2சாமுவேல் 7-8 |
| 18 | சங்கீதம் 138 | வெளி. 12 | 2சாமுவேல் 9-10 |
| 19 | சங்கீதம் 139 | வெளி. 13 | 2சாமுவேல் 11-12 |
| 20 | சங்கீதம் 140 | வெளி. 14 | 2சாமுவேல் 13-14 |
| 21 | சங்கீதம் 141 | வெளி. 15-16 | 2சாமுவேல் 15-16 |
| 22 | சங்கீதம் 142 | வெளி. 17-18 | 2சாமுவேல் 17-18 |
| 23 | சங்கீதம் 143 | வெளி. 19-20 | 2சாமுவேல் 19-20 |
| 24 | சங்கீதம் 144 | வெளி. 21-22 | 2சாமுவேல் 21-22 |
| 25 | சங்கீதம் 145 | மத்தேயு 1-2 | 2சாமுவேல் 23-24 |
| 26 | சங்கீதம் 146 | மத்தேயு 3-4 | 1இராஜா. 1-2 |
| 27 | சங்கீதம் 147 | மத்தேயு 5-6 | 1இராஜா. 3-4 |
| 28 | சங்கீதம் 148 | மத்தேயு 7-8 | 1இராஜா. 5-6 |
| 29 | சங்கீதம் 149 | மத்தேயு 9-10 | 1இராஜா. 7-8 |
| 30 | சங்கீதம் 150 | மத்தேயு 11-12 | 1இராஜா. 9-10 |
| 31 | நீதி. 1 | மத்தேயு 13-14 | 1இராஜா. 11-12 |